# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

20.08.2020 வியாழக்கிழமை


## முன்னாள் போராளி சாவு

முல்லைத்தீவு, ஓக. 20
முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த முன்னாள் போராளி ஒருவர் ஐரோப்பிய நாட்டுக்குச் செல்வதற்காக இலங்கையிலிருந்து வெளியேறி பங்களாதேஷில் தங்கியிருந்தவேளை மாரடைப்பால் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்

2



## முதல் கூட்டத்திலேயே ஆளுங்கட்சி ஆதிக்கம்

### சம்பிரதாயத்தை மீறிவிட்டதாக எதிரணி காட்டம்

கொழும்பு, ஓக. 20
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கொள்கை விளக்க உரை மீது நாடாளுமன்றத்தில் இன்று முழு நாள் விவாதம் நடைபெறுகிறது. நாடாளுமன்றம் இன்று காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா

2

## புதினம் தெரியுமோ?

இன்று இலங்கையின் 9ஆவது நாடாளுமன்றம் கூடிய போது பலரது எதிர்பார்ப்பு முன்னணியின் கஜேந் திரகுமாரைச் சுற்றியே இருந்தது. ஏற்கனவே அவர் நாடாளுமன்ற உறுப்பின ராகப் பதவி வகித்திருந்தாலும் இம்முறையே அவர் முன்னணி சார்பில் உள் நுழைந்திருக்கிறார். கடந்த பத்து வருடங்களாக தமிழ்த் தேசியத்தின் குரலாக ஒலித்த அவரது கட்சி கொள்கையை மட்டுமே முன்நிறுத்தி தேர்தல் களைச் சந்தித்து வந்தது.

2

# நாடாளுமன்றத்தில் இரு பதவிகள் சு.க. வசம்!

### சபாநாயகராக மஹிந்த யாப்பா தெரிவு
### தமிழ் பிரமுகர்களும் வாழ்த்து மழை

கொழும்பு, ஓக. 20
இலங்கையின் 9ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடர் இன்று நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு சபை கூடியபோது முதலில் ஜனாதிபதியின் பிரகடனம் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தால் வாசிக்கப்பட்டது.

2

## 222 பேர் இன்று சத்தியப்பிரமாணம்

கொழும்பு, ஓக. 20
ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு இன்று இடம்பெற்றது. இதன்போது 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில், பிரதம அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட்ட 222 பேர் இன்று சத்தியப்பிரமாணம் செய்தனர். தேசியப்பட்டியல் சர்ச்சையால் எமது மக்கள் சக்தி,

2

## படகு மூலம வந்த எம்.பி.

கொழும்பு, ஓக. 20
ஒன்பதாவது நாடாளுமன்றின் முதல் அமர்வு இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது.
நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொள்வதற்கு முதன் முறையாக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்

2

## 902 குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கலாம்

### கோத்தாவுக்கு பரிந்துரை

கொழும்பு, ஓக. 21
மன்னிப்பு வழங்குவதற்கு தகுதியுடையவர்களின் பெயர்ப் பட்டியல் ஜனாதிபதி கோத்தாபயவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சிறு குற்றங்களை இழைத்த 902 பேருக்கு, ஜனாதிபதியின் அனுமதியுடன் பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது. நாட்டை அச்சுறுத்தி வரும் கொரோனா

2

## 13ஐ பலவீனப்படுத்த இடமளிக்கமாட்டேன்!

### கன்னி அமர்வில் பிள்ளையான் திட்டவட்டம்

கொழும்பு, ஓக. 20
கிழக்கு மாகாண சபையில் என்னுடைய தலைமையில் ஆட்சியைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ச கொண்டுவந்திருந்தபோது அதற்குத் துணை நின்று, தோள் கொடுத்து மக்கள் மீது நம்பிக்கையைக் கட்டியெ

2

## ஒரு லட்சம் வேலைவாய்ப்பு வடக்கு மற்றும் கிழக்கில் இல்லை

கொழும்பு, ஓக. 20
நாடளாவிய ரீதியில் ஒரு இலட்சம் பேருக்கு அரச வேலை வாய்ப்பை வழங்கும் திட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இப்போதைக்கு கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படமாட்டா என்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.
க.பொ.த. சாதாரண தரம் வரை கல்வி கற்றவர்களில் இருந்து நாடு முழுவதும் ஒரு இலட்சம் பேருக்கு வேலை

2A

## வட்டி வீதத்தில் மாற்றங்கள் மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு, ஓக. 20
தங்கக்கடன் அடைவு, கடனட்டை என்பவற்றுக்கான வட்டி வீதத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபை அறிவித்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபை நேற்றுமுன்தினம் கூடிய

2A

சுடரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

## புதினம் தெரியுமோ

சில தேர்தல்களை கட்சியின் கொள்கை காரணமாக முன்னணி புறக்கணித்தது முண்டு. இப்படியாக தமிழ்த் தேசியம் என்று மேடை களில் முழங்கிய முன் னணியின் எம்.பிக்கள் நாடாளுமன்றம் புகுந்தால் அங்கும் தமிழுக்காகவும் தமிழர்களின் உரிமைக்காகவும் குரல் கொடுப்பார்கள் என்பது மக்களின் நம்பிக்கை. அதனை அவர்களது நாடாளுமன்றக் கன்னியுரை கோடிகாட்டும் என இன்றைய நாளை எதிர்பார்த்தார்கள். ஆனால் எல்லா எதிர்பார்ப்புக்களையும் உடைத்துக் கொண்டு மேற்கத்தேய 'கோட்சூட்' அணிந்தபடி சபைக்குள் நுழைந்த கஜேந்திரகுமார் நுனிநாக்கு ஆங்கிலத்தில் தன் கன்னியுரையை நிகழ்த்திவிட்டமர்ந்தார். ஆகமொத்தம் தமிழ், தமிழ்த் தேசியம், தமிழர் பண்பாடு என்பதெல்லாம் மேடைக்கும், வாக்குச் சேகரிக்க மட்டுமே என்பதை முன்னணியும் மக்களுக்கு உறைக்கச் சொல்லியிருக்கிறது.

– பட்சி

# நாடாளுமன்றத்தில்...

அதன்பின்னர் சபாநாயகரை தெரிவு செய்யும் நடவடிக்கை இடம்பெற்றது. 9 ஆவது நாடாளுமன் றத்தின் சபாநாயகர் பதவிக்கு மஹிந்த யாப்பா அபேவர்தனவின் பெயரை முன்மொழிவதாக சபை முதல்வர் தினேஷ்குணவர்தன, நாடாளுமன்ற செயலரிடம் அறிவித்தார்.
தினேஷின் முன்மொழிவை ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலர் ரஞ்சித் மத்தும பண்டார வழி மொழிந்தார். சபாநாயகர் பதவிக்கு வேறு நபர்க ளின் பெயர் முன்வைக்கப்படாததால் மஹிந்த யாப்பா அபேவர்தன ஏகமனதாகத் தெரிவுசெய்யப் பட்டார்.
அதன்பின்னர் பெயரை முன்மொழிந்த தினேஷ் குணவர்தனவும், வழிமொழிந்த ரஞ்சித் மத்தும பண்டாரவும் புதிய சபாநாயகரை சபாபீடத்துக்கு அழைத்துச்சென்றனர். உறுதியுரை ஏற்ற பின்னர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபாநாயகர் கதிரை யில் அமர்ந்தார். இரண்டாம் கட்ட நடவடிக்கை யாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமா ணம் செய்தனர். இந்நிகழ்வு முடிவடைந்த பின்னர் கட்சித் தலைவர்கள் புதிய சபாநாயகருக்கு வாழ்த்து களைத் தெரிவித்தனர்.
அரசின் சார்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், பிரதான எதிர்க்கட்சி சார்பில் சஜித் பிரேமதாசவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இரா. சம்பந்தனும் வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.
இதனை பதவியாக கருதாது பொறுப்பாக உணர்ந்து செயற்படுமாறு தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டினார்.
அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன், புளொட் தலைவர் த. சித்தார்த்தன், ஈ.பி.டி.பியின் பொதுச்செயலர் டக்ளஸ் தேவா னந்தா, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன், இ.தொ.காவின் பொதுச்செயலர் ஜீவன் தொண்ட மான் ஆகிய தமிழ்த் தலைவர்களும் புதிய சபாநாய கருக்கு வாழ்த்து தெரிவித்து குறுகிய உரையாற்றி னர். இறுதியில் சபாநாயகர் நன்றியுரை ஆற்றினார்.
அதன்பின்னர் பிரதி சபாநாயகர் தேர்வு இடம்பெற் றது. இப்பதவிக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பி னர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவின் பெயரை அக் கட்சி உறுப்பினர் அமைச்சர் மஹிந்த அமரவீர முன்மொழிந்தார். அப்பெயரை இராஜாங்க அமைச் சர் நிமல் லான்சா வழிமொழிந்தார்.
அடுத்ததாக குழுக்களின் பிரதி தவிசாளர் பதவிக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்க ஜன் இராமநாதனின் பெயர் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவால் முன்மொழியப்பட்டு, இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவால் வழிமொழியப்பட்டது. இந்தப் பதவிக்கும் போட்டி இன்மையால் இவரும் ஏகமனதாக தெரிவுசெய்யப் பட்டார்.
அதேவேளை, 9 ஆவது நாடாளுமுன்றத்தின் சபை முதல்வராக தினேஷ் குணவர்தனவும், ஆளுங்கட்சி கொறடாவாக ஜொன்ஸ்டன் பெர்னாண்டோவும் சபாநாயகரால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.
எதிர்க்கட்சித் தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச ஏற்றுக்கொள்ளப்பட் டார். (ஒ,5,44)

## 222 பேர் இன்று...

ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவற்றின் உறுப்பி னர்கள் சபை அமர்வில் பங்கேற்கவில்லை. தூக்குத் தண் டனை விதிக்கப்பட்டுள்ள இரத்தின புரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னரும் சபை அமர்வில் பங்கேற்க வில்லை. (ஒ,5,44)

## முதல் கூட்டத்திலேயே...

அபேவர்தன தலைமையில் கூடவுள்ளது. பிரதான சபை நடவடிக் கைகள் முடிவடைந்த பின்னர் விவாதம் ஆரம்பமாகி மாலை 4.30 மணிவரை நடைபெறும்.
அதேவேளை, நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதி களுக்கான கூட்டம் சபாநாயகர் தலை மையில் நேற்று சபாநாயகர் அலுவலகத் தில் நடைபெற்றது. இதன்போது ஜனாதி பதியின் கொள்கை விளக்க உரைமீது இரு நாள்கள் விவாதம் வேண்டும் என எதிரணிகள் கோரின. எனினும், ஒரு நாள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.
அத்துடன் ஆளுங்கட்சியால் முன்வைக் கப்படும் யோசனை விவாதத்துக்கு எடுத் துக் கொள்ளப்படும்போது வழமையாக எதிரணிக்கு 60 வீதமும் ஆளுங்கட்சிக்கு 40 வீதமும் நேரம் ஒதுக்கப்படும்.
ஆனால், ஆளுங்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை காரணம் காட்டி இந்த நடைமுறையை அரசு மாற்றியுள்ளது எனவும், ஆளுங்கட்சிக்கு 60, எதிர ணிக்கு 40 என தவறான முடிவு முதல் கூட்டத்திலேயே எடுக்கப்பட்டுள்ளது. இதனை வன்மையாகக் கண்டிக்கின் றோம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணே சன் தெரிவித்தார்.
ஆளுங்கட்சி உறுப்பினர்களின் எண் ணிக்கையை காரணம்காட்டி சம்பிரதா யத்தை மீறமுடியாது. 1977 இல் ஜே. ஆர். ஆட்சியின்போது ஆறில் ஐந்து பெரும்பான்மை இருந்தபோதும் எதி ரணிக்கு 60 வீத நேர ஒதுக்கீடு வழங்கப் பட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டி னார்.
அதேவேளை, எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டமையால் விவாதத்துக்கான நேர ஒதுக்கீடு தொடர்பில் நாளை காலையே இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது. (ஒ,5,44)

## முன்னாள்...

டுள்ளது.
சுடர் அல்லது குமரன் என்று அழைக்கப்படும் 44 வயதுடைய முன் னாள் போராளியான இவர் ஒரு காலை இழந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5,19)

## படகு மூலம்...

படகு மூலம் வந்த சம்பவம் இன்று பதிவாகியது. மதுர விதானகேவு படகு மூலம் நாடாளுமன்றுக்கு வருகை தந்துள்ளார். நாடாளுமன் றுக்கு இவ்வாறு வருகை தந்த அவர், படகு மூலம் தாம் வருவதற்கு ஏற்பா டுகளை செய்து கொடுத்த ஜனாதிபதி கோத்தாபயவுக்கு தனது நன்றியை யும் தெரிவித்தார். (ஒ,5)

## 902....

தொற்றை கட்டுப்படுத் தல் மற்றும் சிறைச்சாலை களில் நிலவும் நெருக்கடியை குறைக்கும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப் பட்டது. ஜனாதிபதி சட் டத்தரணி காலிங்க இந் திரதிஸ்ஸ தலைமையில், கைதிகள் மற்றும் அவர்க ளின் விடுதலை குறித்து ஆராய்ந்து பார்ப்பதற்காக அண்மையில் ஜனாதிபதி யால் குழுவொன்று நியமிக்கப்பட்டது.
இந்தக் குழுவாலேயே பொது மன்னிப்பு வழங்கு வதற்கு தகுதியுடையவர்க ளின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, முன்னதாக, 20 ஆண்டுகளுக்கு மேல் சிறைவாசம் அனுபவித்த 60 வயதுக்கும் மேற்பட்ட கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க வேண் டும் என்று சிறைச்சாலை கள் திணைக்களம், அண்மையில் ஜனாதிபதி யிடம் கோரிக்கை விடுத் திருந்தமை குறிப்பி டத்தக்கது. (ஒ,5)

# 13ஐ பலவீனப்படுத்த...

முடிப்பி அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முடிந்தளவு காப்பாற்றியிருக்கின்றேன். அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஊடாக மாகாண சபையை மேலும் பலப்ப டுத்த வேண்டும். அதற்காக அரசுக்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்குவேன். இவ்வாறு தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்க ளப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேச துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.
9ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்குச் சபையில் வாழ்த்துத் தெரிவித்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த நல்லாட்சி அரசு என்னைத் திட்டமிட்டு சிறைப்படுத்தியுள்ளது. ஐந்து வருடங்களாக நான் சிறைவா சம் அனுபவித்து வருகின்றேன். இந்தநிலையில், மட்டக்க ளப்பு மாவட்ட மக்கள் என்னைத் தங்களுக்குச் சேவை செய்வதற்காக நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைத் துள்ளனர்.
இந்த நாடாளுமன்ற அமர்வில் வந்து நான் கலந்துகொள்வ தற்குப் பல தடங்கல்களும் தாமதங்களும் இருக்கின்றன. ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்தில் அனுமதி கோர வேண்டும். இப்படியான சூழலில் என்னால் மக்களுக்குச் சேவையாற்ற முடியாது.
எங்களுடைய நாட்டில் சமூக முரண்பாடுகள் நடந்து முடிந்திருக்கின்றன. நான் இந்த சமூக முரண்பாடு, ஆயுத போராட்டங்கள் காரணமாக 16 வயதிலே தமிழீழ விடுத லைப்புலிகள் அமைப்பில் இணைந்து போராடியவன்.
ஆனால், அந்த அமைப்பின் நோக்கங்கள், கொள்கைகள் பிழைத்ததன் காரணமாக அதிலிருந்து விலகி ஜனநாயக ரீதி யான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியை ஆரம் பித்து இன்று பல விடயங்களைச் செய்திருக்கின்றேன்.
இந்தநிலையில் இப்போது வட பகுதி மக்களும் தென்பகுதி மக்களும் இணைந்து பலமான ஓர் அரசை அமைத்திருக் கின்றார்கள். இந்த அரசுக்குத் தொடர்ந்தும் நான் ஒத்து ழைப்பு வழங்குவேன்- என்றார். (ஒ,5,22,44)

# குப்பைகள் ஏற்றுவதற்கு புதிய நடைமுறை

சாவகச்சேரி,ஓக. 20

சாவகச்சேரி நகரசபையினர் குப்பைகளை வாகனங்களில் ஏற்றுவதற்கு புதிய நடைமுறையை செப்ரெம்பர் மாதம் தொடக்கம் அமுல்படுத்தவுள்ளனர். நகரசபை சுகாதார அலகினரால் தினமும் வட்டாரங்களில் கழிவுகள் அகற்றும் பணிகள் வாகனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வரியிறுப்பாளர்களால் வீதியோரங்களில் உக்கும் மற்றும் உக்காத கழிவுகளை ஒன்றாக உரப்பைகளில் போட்டு வைப்பதால் அதனைத் தரம் பிரிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் செப்டெம்பர் முதலாம் திகதி தொடக்கம் உக்கும் மற்றும் உக்காத கழிவுகளை வரியிறுப்பாளர்கள் தரம் பிரித்து வீதியோரங்களில் வைக்கும் குப்பைகள் மட்டுமே வாகனத்தில் ஏற்றப்படும் என்று சபையின் சுகாதாரக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் இரு மாதங்களுக்கு அமுல் படுத்தப்பட்டு வரியிறுப்பாளர்கள் ஒத்துழைப்பு வழங்கும் பட்சத்தில் நவம்பர் மாதம் தொடக்கம் ஒருநாள் உக்கும் கழிவுகளும் மறுநாள் உக்காத கழிவுகளும் வாகனங்களில் ஏற்ற நடவடிக்கை எடுப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. (ஐ-9)

# வீதி விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி,ஓக.20

பேருந்துக்காக வீதியோரத்தில் நின்ற யுவதியை வேகக் கட்டுப்பாட்டை இழந்து வந்த மோட்டார் சைக்கிள் மோதியது. இதன் போது இருவர் காயமடைந்தனர். இந்த விபத்து நேற்று மட்டுவில் பகுதியில் இடம்பெற்றது.

காயமடைந்த மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த 23 வயது யுவதியும், சித்தன்கேணியைச் சேர்ந்த 19 வயது இளைஞனும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ-9)

# மாதகலில் காணி சுவீகரிப்பு முயற்சி மக்களின் எதிர்ப்பையடுத்து நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஓக. 21

மாதகலிலுள்ள கடற்படை முகாமுக்கு தனியார் காணிகளை சுவீகரிக்க நில அளவைத் திணைக்களத்தினர் இன்று வியாழக்கிழமை வருகை தந்த போது அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியை நில அளவைத் திணைக்களத்தினர் அளப்பதற்கு வருகை தந்திருந்தனர். இதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். நில அளவைப் பணியை கைவிட்டு விட்டு திரும்பிச் சென்றனர். சிறிது நேரம் அப்பகுதியில் பதற்றமான நிலைமை காணப்பட்டது. மக்களின் போராட்டத்தின் போது ஏராளமான பொலிஸாரும் கடற்படையினரும் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர். (ஒ,5,20)

# 50 கிலோ கேரள கஞ்சா கிளிநொச்சியில் மீட்பு

### சந்தேகத்தில் பெண் கைது

கிளிநொச்சி, ஓக. 20

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முரசுமோட்டைப் பகுதியில் பெண் ஒருவர் 50 கிலோ கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் விசேட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. விற்பனைக்காகக் கொண்டு வரப்பட்டு வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் 50 கிலோ கேரளக் கஞ்சாவை இன்று அதிகாலை கைப்பற்றியதாகப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர். கஞ்சாவை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பெண்ணைக் கைது செய்துள்ளோம் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ,5,6)

# சடலம் மீட்பு

வவுனியா, ஓக. 20

வவுனியா பறயனாலங்குளம் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் வீதித் தடைக்கு அருகிலுள்ள சிறிய கொட்டிலில் இனம் தெரியாத நபரின் சடலம் இன்று காலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சடலத்தை வவுனியா மருத்துவமனையில் பொலிஸார் ஒப்படைத்தனர்.

எந்தவித ஆவணங்களும் இல்லாத நிலையில் சடலம் மீட்கப்பட்டது. அதனால் சடலமாக மீட்கப்பட்டவரை அடையாளம் காண முடியவில்லை என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ஒ,5,110)

# 19ஆவது திருத்தம் நீக்கம்: சு.க.இன்னும் முடிவில்லை

### இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 20

19ஆவது அரசமைப்புத் திருத்தம் நீக்கப்படுவதற்கு அல்லது அதில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு யோசனைகள் முன்வைக்கப்பட்டால் கட்சித் தலைமைத்துவம் மற்றும் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே சுதந்திரக் கட்சி இறுதித் தீர்மானத்தை எடுக்கும் என்று மின்உற்பத்தி இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்குவதற்கு அல்லது அதில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஆளும்தரப்பின் ஒரு சில உறுப்பினர்கள் அல்லது அமைச்சர்களே கருத்துக்களை முன்வைத்துக் கொண்டிருக்கின்றனர். எனினும் உயர் மட்டத்திலிருந்து இது வரையில் உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. எந்தத் தீர்மானமானாலும் அறிவிப்புக் கிடைத்த பின்னரே எடுக்க முடியும். இவ்விடயம் பற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டாலும் ஆதரவளிப்பதாகவோ அல்லது எதிர்ப்பதாகவோ உடனடியாக எதனையும் கூறி விட முடியாது.

சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கட்சியின் ஏனைய முக்கியஸ்தர்களுடன்

கலந்தாலோசித்த பின்னரே தீர்மானிக்க முடியும். கட்சித் தலைமைத்துவம் மற்றும் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் கலந்தாலோசிக்கமால் தனிப்பட்ட நிலைப்பாட்டைக் கூற முடியாது. கட்சிக்குள் பேசி அதன் பின்னர் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் பேசிய பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றார். (ப)

# ஒரு லட்சம்...

வாய்ப்பை வழங்கவுள்ளதாக அரசு அறிவித்தது.

எனினும் தற்போது வடக்கு, கிழக்கில் மட்டும் அதனை நிறுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பு வழங்குவதை இடைநிறுத்துவதற்கான உத்தரவு வடக்கு கிழக்கின் 8 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டச் செயலகங்களுக்கும் நேற்று மாலை தொலை நகல் மற்றும் மின் அஞ்சல்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், குறித்த நியமனத்தில் யாழ்ப்பாணத்தில் 6 ஆயிரத்து 626 பேரும் கிளிநொச்சியில் 2 ஆயிரத்து 261 பேரும் மன்னாரில் ஆயிரத்து 830 பேரும் முல்லைத்தீவில் ஆயிரத்து 565 பேரும் நியமிக்கப்படவிருந்ததோடு, வவுனியாவில் ஆயிரத்து 258 பேரும் நியமிக்கப்படவிருந்தனர்.

இவர்களுக்கு எதிர்வரும் 31ஆம் திகதி முதல் நியமனம் வழங்கப்படும் எனவும் மாவட்டச் செயலகங்களுக்கு உறுதியளிக்கப்பட்டது. இந்த நிலையிலையே அதனை இடை நிறுத்துமாறு அவசர உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் ஜனாதிபதி கோத்தபாயவின் பணிப்புரைக்கு அமைய குறைந்த வருமானம் பெறும் ஒரு இலட்சம் பேருக்கும் தொழில்வாய்ப்பு இன்றி காணப்படும் 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கும் தொழில் வாய்ப்பை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு அமைய 50 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்பு பெற்றவர்களின் பெயர் விவரங்கள் அரச சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்தன.

மேலும் ஒரு இலட்சம் பேருக்கான வேலை வாய்ப்பு தெரிவுக்கு நாடளாவிய ரீதியில் வறிய குடும்பத்திலிருந்து தெரிவு செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

# வட்டி வீதத்தில் மாற்றங்கள்...

போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி கடனட்டைகளுக்கான அதிகபட்ச வட்டியை 18 வீதமாக குறைப்பதற்கும், தங்கக்கடன் அடைவு வட்டியை 10 வீதமாக குறைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வங்கி மேலதிக பற்றுக்கான வட்டி 16 வீதமாக குறைக்கப்பட்டுள்ளதுடன், தற்போதைய கொள்கை வட்டி வீதத்தை மாற்றமின்றி பேணுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நிலையான வைப்புக்கான வட்டி 4.5 வீதமாகவும் நிலையான கலுகை கடன் வட்டி வீதம் 5.5 வீதமாகவும் காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

# சமூக பாதுகாப்பு சபையால் புலமைப் பரிசில் வழங்கல்



யாழ்ப்பாணம்,ஓக.20
நிதி அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற, இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் மாணவர்களுக்கு, புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.
அதற்கமைவாக 2019 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த, 160 மாணவர் களுக்குக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.
அத்துடன் சனச அபிவிருத்தி வங்கியால் மாணவர்களுக்குப் பரிசில் பொதிகளும் வழங்கப் பட்டன. தற்போதைய கொவிட் 19 அனர்த்த சூழ் நிலை காரணமாக, வழமை யாக மாவட்டச் செயலகத்தில் நடைபெற்று வந்த நிகழ்வு, இந்த வருடம் பிரதேச செயல கங்களின் ஊடாக நடைபெற் றுள்ளமை குறிப்பிடத்தக்கது.
அதேவேளை இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் புல மைப்பரிசில் கொடுப்பனவில் உயர்ந்த தொகையாக 50 ஆயிரம் ரூபா உ.டுசாரா (இளவாலை அருணோதயா கல்லூரி மற்றும் வை.சகினா, பா. கபிசனா(யா. வேம்படி மக ளிர் கல்லூரி) ஆகிய மூன்று மாணவர்களுக்கும் வழங்கப் பட்டன.
மாவட்டச் செயலர் க. மகே சன் தலைமையில், மேலதிக செயலர் ம. பிரதீபன், இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் வடக்கு கிழக்கு சிரேஷ்ட இணைப்பதிகாரி பா. பிரதீபன், சனச அபிவி ருத்தி வங்கி உத்தியோகத்தர் ம. ஜெனகன் மற்றும் பெற் றோர்கள் ஆகியோரின் பங்கு பற்றலுடன் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.
மாணவர்கள் ஒவ்வொருவருக் கும் 50 ஆயிரம் ரூபா காசோலை, பரிசில் பொதிகள், சான்றிதழ்கள் மற்றும் சனச அபிவிருத்தி வங்கியின் 8 ஆயிரம் பெறுமதியான காசோலை என்பன வழங்கப் பட்டன. (க)

முகமாலையில்

# நூலகம் அமைக்கும் பணிகள் முன்னெடுப்பு

கிளிநொச்சி, ஓக.20
நாட்டில் இடம்பெற்ற யுத்த காலப்பகுதியில் இலங்கை இராணுவத்தி னதும் விடுதலைப் புலிகளினதும் முன்னரங்கப் பகுதியாக காணப் பட்ட முகமாலைப் பகுதியில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் நூலகம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கபட்டுள்ளது.
மக்களின் தொடர்ச்சியான வேண்டுகோளை ஏற்று 60 லட்சம் ரூபா சபை நிதி மூலம் இந்த வேலைத்திட்டம் இடம்பெறுகின்றது. நூலகம் மறறும் உப அலுவலகம் என்பன இந்த நிதி மூலம் முகமாலை பகுதி யில் அமைக்கப்படுகின்றமை குறிப்பிடதக்கது. இந்தப் பணிகளை பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தலைவர் சுப்பிரமணியம் சுரேன் நேரடியாகச் சென்று பார்வை யிட்டுள்ளார். (ரி2-6)

சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட

# 11 வட்டாரங்களுக்கு 150 வீதி விளக்குகள்



சாவகச்சேரி, ஓக.20
சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட 11 வட்டாரங்களுக்கு மேலும் 150 வீதி மின்விளக்குகள் பொருத்தப்படவுள் ளன.
இதற்கான தீர்மானம் கடந்த சபை அமர்வில் நிறைவேற்றப்பட்டது.
சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீதி விளக்குகள் பொருத்துவதற்கு, சபையின் உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டது.
வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்துவதற்கான அனுமதி கோரி, ஜூன் மாதம் நடைபெற்ற அமர்வில், சபையின் தவிசாளரால் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது.
இதன்போது கருத்துத் தெரிவித்த உறுப்பினர்கள், சபையால் கடந்த காலங்களில் கூறுவிலைகள் மூலம் கொள்வனவு செய்யப்பட்டு, பொருத்தப்பட்ட வீதி விளக்குகள் மிகக் குறுகிய காலப்பகுதியில் பழுதடைந்துள்ளன. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். இதனால் கொள்வனவு செய்யப்படும் வீதி விளக்குகள் தரமானதாக, உத்தரவா தம் உள்ளதா? என நாங்கள் பார்வை யிட்ட பின்னரே கொள்வனவு செய்ய வேண்டுமெனத் தெரிவித்த னர்.
இதனையடுத்து கடந்த மாத (ஜூலை) அமர்வில் மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட்டன. ஏற்றுக் கொள ளப்பட்ட வீதி விளக்குகளைப் பொருத்துவதெனவும், சபையின் பதினொரு வட்டாரத்துக்கும் சமமா கப் பிரிக்கப்பட்டு, தலா 13 வீதி விளக்குகள் பொருத்துவதெனவும் சபையில் தீர்மானிக்கப்பட்டது என்று தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார். (க-9)

# சாரதிகள் 6 பேருக்கு ரூ.1,77,500 தண்டம்

சாவகச்சேரி, ஓக.20
போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய ஆறு பேருக்கு சாவ கச்சேரி நீதிமன்றால் ஒரு லட்சத்து 77 ஆயி ரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட் டது.
சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றுமுந்தி னம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டன.
மதுபோதையில் வாகனம் செலுத்திய நால்வருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் ஒரு லட்சம் ரூபாவும், சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதிப் பத்திரம் ஆகியவை இன்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 50 ஆயிரம் ரூபாவும், காப்புறு திப் பத்திரம் மற்றும் வாகன வரிப்பத்திரம் ஆகியவை இன்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 27 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

# கஞ்சாவுடன் கைதானவருக்கு ரூ.6,000 தண்டம்

மன்னார், ஓக.20
70 கிராம் கேரளக் கஞ் சாவை தன் வசம் வைத் திருந்த நபருக்கு மன் னார் மாவட்ட நீதி வான் நீதிமன்றில் 6,000 ரூபா தண்டம் விதிக்கப் பட்டது. சிலாபத்துறை பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
இதன்போது சந்தேகந பர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-60)

# வவுனியாவில் தொடர்கிறது யானைகளின் அட்டகாசம்!

வவுனியா, ஓக.20
வவுனியா மாவட்டத்தின் பல் வேறு பகுதிகளில் காட்டுயானை களின் அட்டகாசத்தால் பொது மக்கள் மற்றும் தோட்டச் செய்கையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
குறிப்பாக செட்டிகுளம், நீலியா மோட்டை, கனகராயன் குளம்,புளியங்குளம், நெடுங் கேணி,காஞ்சுரமோட்டை, மெனிக்பாம் போன்ற பகுதிகளில் யானைகளின் அட்டகாசம் மிக வும் அதிகரித்த நிலையில் காணப்படுகிறது.
இதனால் விவசாய, தோட்ட செய்கையாளர்கள் வெகுவாகப் பாதிப்புக்குள்ளாகி வருகின்ற னர். ஒவ்வொரு இரவும் வருகை தரும் யானைக்கூட்டங்கள், பயன் தரும் பயிர்களை நாசம் செய்வதுடன்,இருப்பிடங்களை யும் சேதப்படுத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதிக ளின் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். யானை களின் தொல்லைகளுக்கு நிரந்த ரத் தீர்வு காணுமாறு பாதிக்கப் பட்ட பிரதேச மக்கள் தொடர்ச் சியாகக் கோரிக்கை முன்வைத்து வருகின்ற நிலையில் அவர்களுக் கான தீர்வு இதுவரை வழங்கப் படவில்லை. இதேவேளை மாவட்டத்தின் பிரதான வீதிக ளில் பகல் நேரங்களில் வந்து நிற்கும் யானைகளால் பயணிக ளும் அசௌகரியங்களுக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள் ளது. குறிப்பாக, புளியங்குளம் நெடுங்கேணி பிரதான வீதி, மதவாச்சி -மன்னார் வீதி, பூவசரங்குளம் -செட்டிகுளம் வீதிகளில் மாலைவேளைகளில் யானைகளின் பிரசன்னம் அண் மைய நாள்களாக அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் அவ்வீதிகளின் வழியாகப் போக்கு வரத்துச் செய்கின்ற பயணிகள், வாகனச் சாரதிகள் எனப் பலரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றமையுடன். அச்சத்துட னேயே பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஐ-110)

# புதிய அரசுடன் நெருங்கி செயற்பட இந்தியா தயார்

## கொடியசைத்தார் ஜெய்ஷங்கர்

கொழும்பு, ஓக. 20

இந்தியாவின் 'அண்டைய நாட்டுக்கு முன்னுரிமை' எனும் கொள்கை யின் கீழ் இலங் கைக்கும் இந்தி யாவுக்கும் இடையிலான நல்லு றவை அடுத்தகட்டத்துக்குக் கொண்டு செல்வதற்காக இலங்கை யின் புதிய அரசாங்கத்துடன் மிகவும் நெருங்கிச்செயற்படத் தயார் என்று இந்தியா அறிவித் துள்ளது.

வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்ட தினேஷ் குணவர்தன கடந்த திங்கட்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட நிலையில், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்ஷங்கர் அவருக்கு தனது வாழ்த்தைத் தெரிவித்திருந்தார். அத்தோடு இந்தியாவின் 'அண்டைய நாட்டுக்கு முன்னுரிமை' எனும் கொள்கையின் கீழ் இலங்கை - இந்திய நாடுகளுக்கு இடையிலான நல்லுறவை அடுத்த கட்டத்திற்கு கொண்டுசெல்வதற்காக வெளிவிவகார அமைச்சுடன் மிகவும் நெருங்கிச் செயற்படத் தயாராக இருப்பதாகவும் ஜெய்ஷங்கர் தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாங்லேவும், தினேஷ் குணவர்தனவைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார். சந்திப்பின்போது இந்திய வெளியுறவு அமைச்சரின் வாழ்த்துக் கடிதத்தை தினேஷ் குணவர்தனவிடம் கையளித்த இந்திய உயர்ஸ்தானிகர், இருநாடுகளுக்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதில் அண்மைய பொதுத் தேர்தலில் புதிய அரசாங்கம் பெற்றுக்கொண்டிருக்கும் உறுதியான மக்களாணை முக்கிய பங்கை வகிக் கும் என்று சுட்டிக் காட்டினார்.

இச்சந்திப்பின்போது கொவிட் -19 பரவலின் பின்னரான காலப்பகுதியில், இருநாடுகளும் பரஸ்பர ஒத்துழைப்புடன் செயற்படுவதன் அவசியம் குறித்து வலியுறுத்திய அமைச்சர் தினேஷ் குணவர்தன, இருநாடுகளுக்கும் இடை யில் வரையறுக்கப்பட்ட வகையில் பயணங்களையும் சுற்றுலாத்துறை நடவடிக்கைகளையும் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார். அதே வேளை பௌத்த தொடர்புகளை மேலும் விரிவுபடுத்து வதில் ஒத்துழைப்புடன் செயலாற்றுவது பற்றியும் கலந்துரையாடப்பட்டது. (ப)

# ஐ.தே.க–ஐ.ம.ச ஒன்றிணைவு?

கொழும்பு, ஓக. 20

ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் எதிர் காலத்தில் ஒன்று சேர்வதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் ருவன் விஜய வர்த்தன தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் பேச்சு நடத்த எண்ணியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய தலைமை வருவதற்கு ரணில் விக்கிரமசிங்க தடையாக இருக்க மாட்டார்.

முன்னைய அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான தகவல் பரிமாற்றக் குறைபாடே உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்களைத் தடுக்க முடியாது போனமைக்கான காரணம். சஹ்ரான் ஹாசிம் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக சமூக ஊடகங்களில் செய்தி வெளியானபோதும் அது தொடர்பான தகவல்கள் எமது அரசாங்க காலத்தில் கிடைத்திருக்கவில்லை - என்றார். (ப)

# கடத்தப்பட்டேன்என்பது ஊடகங்களின் கட்டுக்கதை



## விளக்குகிறார் அத்துரலியே ரத்ன தேரர்

கொழும்பு, ஓக. 20

நான் கடத்தப்பட்டதாகவும், தலைமறைவாகியுள்ளதாகவும் பிரதான ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் முற்றி லும் தவறானவை தேசி யப் பட்டியல் ரீதியில் எழுந்துள்ள பிரச்சி னைக்கு சட்டரீதியில் முரண்பாடற்ற தீர்வைப் பெற்றுக்கொள்வேன் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அபே ஜன பலவேகய கட்சிக்குக் கிடைக்கப் பெற்ற ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் தொடர்பில் பிரச்சினை தோற்றம் பெற்றுள்ளது. இல்லாத பிரச்சினைகளை பிரதான ஊடகங்கள் பெரிது படுத்தி தம்மைப் பிரபல்யப்படுத்திக் கொண்டன. தேசியப் பட்டியல் முரண்பாட்டால் நான் தலைமறைவாகி விட்டதாகவும், கடத்தப்பட்டதாகவும் போலியான செய்திகளை வெளியிடுவதை முதலில் இந்த ஊடகங்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பௌத்த தேசியவாதத்தைப் பாதுகாக்கவும், கட்டியெழுப்பவும் நாடாளுமன்றம் செல்ல வேண்டிய தேவை கிடையாது. பல்வேறு எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் பொதுத்தேர்தலில் போட்டியிட்டோம். 67ஆயிரம் மக்களின் ஆதரவினால் ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் கிடைக்கப் பெற்றுள்ளது. இதனாலேயே தற்போது முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன. அபே ஜன பலவேகய அமைப்பில் கூட்டணி அமைத்தே தேர்தலில் போட்டியிட்டோம். கூட்டணியின் பொதுச்செயலாளராக நான் செயற்படுகிறேன். ஆகவே தவறான தரப்பினர் தேசியபட்டியல் ஆசனத்தைக் கைப்பற்ற ஒருபோதும் இடமளிக்க முடியாது. சட்ட வழிமுறை ஊடாகப் பிரச்சினை களுக்கு முரண்பாடற்ற விதத்தில் தீர்வைப் பெற்றுக்கொள்வேன்- என்றார். (ப)

# முல்லை சிறு கைத்தொழில் பிரிவால் முகப்புத்தக பக்கம் அறிமுகம்

முல்லைத்தீவு, ஓக.20

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தொழில் முனைவோரின் சந்தை வாய்ப்புக்களை மேம்படுத்துவத்துவதற்காக முல்லைத்தீவு மாவட்ட சிறு கைத்தொழில் பிரிவால் முகப்புத்தக பக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. https://www.facebook.com/sedd.mullaitivu.1 எனும் இப் பக்கத்தின் ஊடாக மாவட்டத்திலுள்ள தொழில் முனைவோரின் உற்பத்திகளைச் சந்தைப்படுத்த முடிவதுடன் நுகர்வோரும் இலகுவில் உற்பத்தியாளரைத் தொடர்புகொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

# இரத்தினபுரியில் புதிய தலைமுறை

கொழும்பு, ஓக்.20

இரத்தினபுரி மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு தமிழ் இளையோர் ஒன்றிணைந்து புதிய தலைமுறை எனும் அமைப்பை உருவாக்கியுள்ளனர். இந்த அமைப்பின் உருவாக்கம் தொடர்பில் அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்ததாவது; இரத்தினபுரி மாவட்டத்தில் தேசியக் கட்சிகள் தமிழர் பிரதிநிதித்துவத் தைத் திட்டமிட்டு இல்லாமல் செய்யும் நோக்கில் செயற்பட்டு வருகின்றன.

தமிழ் பிரதிநிதித்து வத்தை தக்கவைத்துக்கொள்ள பல்வேறு சந்தர்ப்பங்கள் இருந்த போதிலும், அதற்கான பேரம் பேசும் சக்தி இல்லாதுள்ளது. கடந்த காலங்களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியவை இணைந்து மாகாண சபை பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொண்ட போதிலும், அந்தப் பிரதிநிதிகள் மக்கள் சார்பாக இயங்கவில்லை என்பது கண்கூடு. அதேவேளை இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் வாய்ப்பு இருந்த போதிலும் பெரும்பான்மைக் கட்சிகளின் சூழ்ச்சி மற்றும் தமிழ்க் கட்சிகளின் இயலாமை காரணமாக தமிழ்ப் பிரதிநிதித்துவம் பறிபோயுள்ளது. தமிழ்க் கட்சிகள் இதுவரை காலமும் தோல்வியுற்ற உறுப்பினர்களுக்கே மீண்டும் மீண்டும் சந்தர்ப்பம் அளித்து வருகின்றன. இளையோருக்கான வாய்ப்பு தொடர்ச்சியாக மறுக்கப்பட்டே வருகிறது. இதனைக் கருத்திற்கொண்டு ஒட்டுமொத்த இரத்தினபுரித் தமிழர்களின் குரலாக புதிய தலைமுறை அமைப்பு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் கல்விச் சமூகமாக, இளையோராக ஒன்றிணைந்து போட்டியிட்டு இரத்தினபுரியில் தமிழர்களுக்காகக் குரல்கொடுக்க பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதே புதிய தலைமுறை அமைப்பின் குறிக்கோளாகும். என்றனர். (ப)

# களியாட்டத்தில் கலந்துகொண்ட 16 பேர் கைது

கொழும்பு, ஒக.20

திஸ்ஸமாஹாராம கிரிந்த பகுதியில் களியாட்ட நிகழ்வில் கலந்துகொண்ட 10 யுவதிகள் உட்பட 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கிரிந்த பொலிஸாருக்கு கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர் எனக் கிரிந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் ஆறுபேரும், கொழும்புப் பகுதியைச் சேர்ந்த யுவதிகள் 10 பேருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் 20 - 30வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். முகப்புத்தகத்தின் ஊடாக ஒழுங்குச் செய்யப்பட்டுள்ள இந்த களியாட்ட நிகழ்வு, கிரிந்த பகுதியிலுள்ள உணவகமொன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்போது பொலிஸார் சந்தேகநபர்களைக் கைது செய்திருந்ததுடன், அவர்களிடமிருந்து கஞ்சா போதைப் பொருள் மற்றும் சுங்கவரி செலுத்தப்படாத சிகரெட்டுகளையும் கைப்பற்றியுள்ளனர். சந்தேக நபர்களை நேற்று திஸ்ஸமஹாராம நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் முன்னிலைப்படுத்தினர். அவர்கள் அனைவரையும் எதிர்வரும் செவ்வாய் வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ரி1)

# பொதுக்கூட்டம்

வவுனியா, ஒக.20

வவுனியா பூந்தோட்டம் லக்ஷ்மி சமேத நரசிங்கர் ஆலய வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது ஆலயத்துக்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. தலைவராக கோ. ஸ்ரீஸ்கந்தராஜாவும், உபதலைவராக ம.நீலாகரன், செயலாளராக சோ. றஜீதரன், உப செயலாளராக, ந.கருணாநிதி, பொருளாளராக கு. கிருஸ்ணகுமார் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். நிர்வாகசபை உறுப்பினர்களாக ம. சதீசன், இ .பாஸ்கரன், க .சிவலிங்கம் ,க. தேவராசா, செ. கிருபாகரன், இ. சிவச்செல்வன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஜ-110)

# முன்பள்ளிகளை அடுத்த மாதம் திறக்க முடிவு

சாவகச்சேரி, ஒக.20

சிறார்களுக்கான சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பட்சத்தில் தென்மராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட முன்பள்ளிகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி திறக்கலாம் என முடிவுசெய்யப்பட்டுள்ளது.

முன்பள்ளிகளை மீளத்திறப்பது தொடர்பாக பிரதேச செயலர் திருமதி உ.சுபலிங்கம் தலைமையில் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் இம் முடிவு எட்டப்பட்டுள்ளது. கலந்துரையாடலில் சுகாதாரப் பகுதியினர், தென்மராட்சி கல்வி வலயத்தினர், உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். முன்பள்ளிகளின் சிறார்கள் கைகழுவும் வசதிகள் மற்றும் சமூக இடைவெளிகளைக் மேற்கொள்ளக் கூடியவகையில் சிறார்களுக்கு இடவசதிகள் போன்றவற்றைக் மேற்கொள்ளவேண்டும். முன்பள்ளிகளின் விபரங்கள் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு வழங்கப்பட்டு அவர்கள் முன்பள்ளிகளைப் பார்வையிட்டு முன்பள்ளிகளை மீள இயக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என அறிக்கையிடும் பட்சத்தில் செப்ரெம்பர் 2ஆம் திகதி திறக்க அனுமதிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்று ஏற்பட்டதால் கடந்த மார்ச் மாதம் தொடக்கம் முன்பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக முன்பள்ளி மூடப்பட்டுள்ளதால் சிறார்களின் அடிப்படைக் கல்வி பாதிக்கப்படுகின்றது எனப் பெற்றோர் முறையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி1-9)

## சிறுமிக்கு பாலியல் தொந்தரவு: இரண்டு வயோதிபர்கள் கைது

திருகோணமலை, ஒக.20

திருகோணமலை மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 12 வயது சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த இரண்டு வயோதிபர்களை நேற்றிரவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

12 வயது சிறுமி கடைக்குச் சென்ற போது பாலியல் தொந்தரவு கொடுத்ததாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து விசாரணைகளை மேற்கொண்ட மொரவெவ பொலிஸார் 69 வயதுடைய கடை உரிமையாளரையும், 50 வயதுடைய நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இவர்கள் இருவரும் மஹதிவுல்வெவ தெவனிபியவர பகுதியைச் சேர்ந்த கே. எம்.ஜினதாஸ மற்றும் ஏ. எச். ஏ. நிமால் ஜயவர்தன எனத் தெரியவருகின்றது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை இன்று திருகோணமலை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட சிறுமி தற்பொழுது திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.(ரி2)



# 745 இலங்கையர்கள் நாட்டை வந்தடைவு

கொழும்பு, ஒக.20

குவைத், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கட்டார் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து மொத்தமாக 745 இலங்கையர்கள் இன்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி கட்டார், டோஹாவிலிருந்து 20 இலங்கையர்களும், சென்னையிலிருந்து 290 இலங்கையர்களும், குவைத்திலிருந்து 266 இலங்கையர்களும், ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து 169 இலங்கையர்களும் இவ்வாறு நாட்டை வந்தடைந்தனர். இவர்கள் அனைவரிடமும் பி.சி.ஆர்.பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.(ரி2)

# தேசிய விளையாட்டு ஆலோசனை குழுவில் சங்ககார, ஜயவர்தன

கொழும்பு, ஒக.20



இலங்கை கிரிக்கெட் வீரர்களான குமார் சங்ககார மற்றும் மஹேல ஜயவர்தன ஆகியோரை தேசிய விளையாட்டு ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களாக இணைய விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

தேசிய விளையாட்டு ஆலோசனைக் குழுவின் புதிய உறுப்பினர்கள் விரைவில் பெயரிடப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து விளை யாட்டு அமைச்சின் அதிகாரி ஒருவர் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம் கருத்து தெரிவித்ததாவது:

முன்னாள் கிரிக்கெட் வீரர்களான குமார் சங்ககார மற்றும் மஹேல ஜயவர்தன ஆகிய இருவரும் 1973 ஆம் ஆண்டின் விளையாட்டுச் சட்டத்தின் கீழ் இரண்டு ஆண்டுகளுக்கு நியமிக்கப்படுவார்கள்.

நாட்டில் விளையாட்டுக்களை வளர்ச்சியை நோக்கி கொண்டு செல்வது தொடர்பான விடயங்களில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதே அவர்களின் முக்கிய பணியாக இருக்கும் என்றார்.

இதேவேளை, சங்ககார மற்றும் ஜயவர்தன தவிர, இலங்கையில் விளையாட்டுகளை மேம்படுத்துவதில் தொடர்ச்சியாக உறுதியளித்துள்ள வல்லுநர்கள் பலர் இந்தக் குழுவில் இருப்பார்கள் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. (ரி2)

# கூட்டிலுள்ள விலங்குகளை பார்ப்பது காலாவதியான முறை

## சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக.20

தெஹிவளை மிருகக்காட்சி சாலையை பிலியந்தலை கஹபொல பகுதிக்கு மாற்றுவதற்கான திட்டம் தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். கூண்டுகளில் அடைக்கப்பட்டுள்ள விலங்குகளைப் பார்ப்பது ஒரு காலாவதியான முறைமையாகும். ஆகையினால் மிருகக்காட்சி சாலையை நவீன உலகத்திற்கு ஏற்றவாறு மாற்ற வேண்டியது அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார் சுற்றுலாத் துறை அமைச்சகத்தில் விலங்கியல் மற்றும் தாவரவியல் பூங்கா அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் பிரசன்ன ரணதுங்க இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் விலங்குகளுக்கு உணவு மற்றும் பிற தேவைகளை வழங்க மாதத்திற்கு சுமார் 4 கோடி ரூபா செலவிடப்படுகிறது எனவும் யானைகளைக் கட்டுப்படுத்த வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்பட்டு, அவற்றை ஊர்வலங்களில் பயன்படுத்த கொடுக்கப்படவுள்ளன எனவும் அமைச்சர் கூறியுள்ளார். இந்த வழிகாட்டுதல்கள் விரைவில் அமைச்சரவையில் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (ரி1)





வரலாற்றுச் சிறப்பு மிக்க தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் பக்திபூர்வமாக ஆரம்பமானது. தொடர்ந்து 12 நாள்கள் திருவிழா நடைபெறும். (ஐ)

# மோசடி அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை அவசியம்

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக.20

அரச திணைக்களங்களில் மோசடியில் ஈடுபடுகின்ற அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பாதுகாப்பு செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார். காலியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, அரச திணைக்களங்களில் நேர்மையான ஊழல் மோசடியற்ற அதிகாரிகள் பெருமளவானோர் உள்ளனர். ஆனால் ஒரு சில மோசடி அதிகாரிகள் உள்ளனர். இந்தக் குறிப்பிட்ட அதிகாரிகள் சிறந்த அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் நேரத்தை ஒதுக்கி செய்து தருகின்ற சிறந்த விடயங்களை சீரழிக்கும் வகையில் செயற்படுகின்றனர். இது மோசடியற்ற அதிகாரிகளின் செயற்பாடுகளுக்குச் சேறு பூசும் செயற்பாடாகும். எனவே எமக்குள்ளும், வெளியிலும் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுகின்ற குழுக்கள், போதைப் பொருள் வியாபாரிகள் உள்ளிட்டவர்களை இனங்கண்டு தண்டனை பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (ரி1)

# வர்த்தக நிலையங்களில் அதிகாலை கொள்ளை

கொழும்பு, ஒக.20

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இடங்களில் இன்று அதிகாலை கொள்ளைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

கொட்டகலை வூட்டன் நகரில் அமைந்துள்ள சில்லறை கடை மற்றும் சமையல் எரிவாயு நிரப்பும் நிலையம் என்பன இனந்தெரியாதவர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் சில்லறை கடையில் சிகரட், உட்பட காசு என மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும், சமையல் எரிவாயு நிரப்பும் நிலையத்தில் 70ஆயிரம் ரூபாய் பணமும் திருடப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடைகளில் முன்புறத்தில் உள்ள இரும்புக் கதவுகளை உடைத்து முன் வழியாக கொள்ளையர்கள் கடைக்குள் நுழைந்துள்ளனர் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (ரி1)

# இலங்கைத் தமிழும் தமிழரும் ஆய்வரங்க நிறைவு நாள் நாளை

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ்நாடு மதுரை உலகத் தமிழ்ச்சங்கமும் இணைந்து இலங்கையில் தமிழும் தமிழரும் என்ற பொருளில் (Zoom) செயலி வாயிலாக முன்னெடுத்து வரும் 20 நாள்கள் இணையவழி ஆய்வு மாநாட்டின் நிறைவுநாள் நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளன. .

உலகத் தமிழ்ச்சங்க இயக்குநர் கலாநிதி ப.அன்புச்செழியன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் இலங்கைத் தமிழ்ச்சிற்றிதழ்கள் என்ற பொருளில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ் ஆய்வுரை ஆற்றுவார். யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் நிறைவுரையாற்றுவார். உலகத் தமிழ்ச்சங்கத்தின் ஆய்வு மைய ஒருங்கிணைப்பாளர் ஐ.ஜான்சிராணி நிகழ்வுகளை நெறிப்படுத்துவார். இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பின்வரும் கடவுச்சொல்லைப் பயன்படுத்திக் கலந்து பயன்பெற முடியும் எனத் தமிழ்ச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ரி3)

Zoom meeting ID : 477 159 8996

pass word : wts



வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை உறுப்பினர் திருமதி அஞ்சலா கோகிலகுமாரின் 2020க்கான வருடாந்த நிதி ஒதுக்கீட்டில், ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டம், பாலமோட்டை, கிழவிகுளம் உட்பட 15 கிராமங்களிலுள்ள வீதிகளுக்கு 60 மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள் ளன. (ரி3)

# முன்னாள் ஐ.ஜி.பி., முன்னாள் அமைச்சர் ஆணைக்குழு முன்!

கொழும்பு, ஒக.20

கட்டாய விடுமுறையில் உள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் அமைச்சர் டி எம் சுவாமிநாதன் ஆகியோர் இன்று அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகியுள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு முன்னாள் பொலிஸ் பரிசோதகர் நியோமல் ரங்ஜீவ தாக்கல் செய்த முறைப்பாடு தொடர்பில் இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

# கூட்டமைப்பு ஒற்றுமையுடன் பயணிக்கும்

## தமிழரசுக் கட்சியின் இளைஞரணிச் செயலர் சுரேன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக. 20

தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையுடன் பயணிக்கும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணிச் செயலாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

மக்கள் கடந்த தேர்தலில் எமக்கு ஒரு செய்தியைக் கூறி இருக்கிறார்கள். தமிழர்களின் உரி மைக்காக ஒற்றுமையாகப் பயணிக்க வேண்டும் என்பதுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமக்குள் காணப்படும் உள்ளக உறுதித்தன்மையை மேம்படுத்த வேண்டும் என்பதே அந்தச் செய்தி.

எனவே நாம் தென் இலங்கை அரசியலைப் புரிந்துகொண்டு அங்கு எவ்வாறு சிங்கள தேசிய வாதக் கொள்கைகளைக் காட்டி மஹிந்த அரசு மக்களை ஒன்று திரட்டி வைத்திருக்கிறதோ அதேபோல் நாமும் தமிழ்த் தேசிய சிந்தனைகளுடன் மக்களைக் கட்டிவளர்க்க ஒன்றுபட வேண்டும். வெறுமனே பதவிகளுக்காக தேர்தல் நோக்கிய அரசியலை முன்னெடுப்போமேயானால், எமது இனம் அழிவதை எவராலும் தடுக்க முடியாது போய் விடும்-என்றுள்ளது. (ப-6)

# வளர்ப்பு நாய்களை உணவாக்க வடகொரிய ஜனாதிபதி உத்தரவு






பியோங்யாங், ஒக.20

நாட்டில் உணவுப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் வீட்டில் உள்ள நாய்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும் என வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் அதிரடி உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளார். வடகொரிய நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறை தொடர்பில் ஐ.நா. சபை சமீபத்தில் ஒரு அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அதில், 2கோடியே 55 லட்சம் மக்கள் தொகை கொண்ட வடகொரியாவில் 60 சதவிகித மக்கள் உணவுப்பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர்' எனக் கூறப்பட்டுள்ளது. ஒப்பந்தங்களை மீறி அணு ஏவுகனைச் சோதனை செய்வதால் வடகொரிய நாட்டின் மீது விதிக்கப்பட்ட பொருளாதார தடை, சமீபத்திய வெள்ளம், கொரோனா அச்சுறுத்தல் ஆகியன இதற்கு முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது. இந்நிலையில் இந்த உணவுப் பற்றாக்குறையை சமாளிக்க கிம் ஜாங் உன் எடுத்துள்ள இந்த முடிவு அனைவரையும் அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது. ஜனாதிபதியின் இந்த அதிரடி உத்தரவை அடுத்து, வீடுகளில் உள்ள வளர்ப்பு நாய்களை அதிகாரிகள் கைப்பற்றி இறைச்சி கூடத்திற்கும், உயிரியல் பூங்காவுக்கும் அனுப்பி வைக்க ஆரம்பித்துள்ளனர். (ரி1)



# புத்தரின் பாதத்தை தொட்டது வெள்ளம்

பீஜிங், ஒக.20

சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள பெருக்கின் காரணமாக 1,300 ஆண்டுகால பழமை வாய்ந்த புத்தர் சிலைக்குப் பாதிப்பு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது. லேசான் எனுமிடத்தில் மலைக்கு நடுவே அமைக்கப்பட்டுள்ள இச்சிலை சுமார் 71 மீற்றர் உயரம் கொண்டதாகும். இந் நிலையில் அந்த மலையைச் சுற்றி ஓடும் நதிகளில், கனமழை காரணமாக வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது. புத்தர் சிலையின் முன்பகுதியில் ஓடும் நீர், 70 ஆண்டுகளில் முதல்முறையாக சிலையின் கால்விரல்களைத் தொட்டு செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி1)



# கீர்த்தி சுரேஷின் அடுத்த படமும் ஓடிடியில்....?




இயக்குநர் கார்த்திக் சுப்பராஜ் தயாரிப்பில், கீர்த்தி சுரேஷ் கதாநாயகியாக நடித்த படம் பெண்குயின். கொரோனா ஊரடங்கு காரணமாக இப்படத்தை தியேட்டர்களில் வெளியிடாமல் நேரடியாக இரண்டு மாதங்களுக்கு முன்பாக ஓடிடி தளத்தில் வெளியிட்டார்கள். ஆனால், படம் சரியாக இல்லாததால் எதிர்பார்த்த வரவேற்பைப் பெறவில்லை. கீர்த்தி சுரேஷ் தற்போது தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் நடித்து வருகிறார். அதில் தெலுங்கில் நடித்துள்ள ஒரு படம் 'குட் லக் சகி'. இப்படத்தின் டீசரை கடந்த சில தினங்களுக்கு முன்பு தெலுங்கு, தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் வெளியிட்டார்கள். டீசருக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

தியேட்டர்கள் திறப்பு எப்போது என்பது உறுதியாகத் தெரியாததால் இப்படத்தை மூன்று மொழிகளிலும் ஓடிடி தளத்தில் வெளியிட உள்ளதாக ஒரு செய்தி வெளியாகி உள்ளது. 'பெண்குயின்" படத்தைவிட அதிக விலை கொடுத்து இப்படத்தை வாங்க சில ஓடிடி நிறுவனங்கள் தயாராக உள்ளன எனச் சொல்கிறார்கள்.

# கண்ணில் கட்டுடன் குஷ்பு



சமூகவலைதளங்களில் எப்போதுமே ஆக்டிவ்வாக இருப்பவர்களில் நடிகை குஷ்புவும் ஒருவர். அவர் தனது அழகான புகைப்படங்களை, வீடியோக்களை வெளியிட்டு வருகிறார். சமீபத்தில் பாடகர் எஸ்பிபி விரைவில் குணமடைய வேண்டும் என கண்ணீரோடு வீடியோ வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் கண்ணில் கட்டுடன் குஷ்பு வெளியிட்டுள்ள புதிய புகைப்படம் ரசிகர்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. அதில் தன் வலது கண்ணில் கட்டுப் போட்டு காட்சியளிக்கிறார் குஷ்பு.

இதுகுறித்து குஷ்பு டுவிட்டரில்-

தனது கண்ணில் கத்தி வைக்கப்பட்டதால் (ஒப்பரேஷன்) சில நாள்கள் ஆக்டிவாக இருக்க மாட்டேன். விரைவில் திரும்ப வந்துவிடுவேன். வெளியே செல்லும் போது கண்டிப்பாக மாஸ்க் அணியவும், சமூக இடைவெளியை கடைப்பிடிக்கவும் என டுவீட் செய்துள்ளார். கண்ணில் சிறு கட்டி ஒன்று இருந்ததாகவும், அதற்காக அவர் அறுவை சிகிச்சை செய்து கொண்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது. இதையடுத்து குஷ்பு விரைவில் நலமாக வேண்டும் என அவரது ரசிகர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# ஜோ ரூட் பாகிஸ்தான் பயணம்



லண்டன், ஒக.20

இங்கிலாந்து அணி கப்டன் ஜோ ரூட் பாகிஸ்தான் சென்று விளையாடத் தயாராக இருக்கிறார் எனத் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் காலத்திலும் உயிரை பணயம் வைத்து பாகிஸ்தான் அணி இங்கிலாந்து சென்று விளையாடி வருகிறது. இதற்கு நன்றிக்கடனாக இங்கிலாந்து அணி பாகிஸ்தான் மண்ணில் விளையாட வேண்டும் என்று முன்னாள் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் வாசிம் அக்ரம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் தனிப்பட்ட முறையில் பாகிஸ்தான் சென்று விளையாட விரும்புகிறேன் என்று இங்கிலாந்து டெஸ்ட் அணி கப்டன் ஜோ ரூட் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஜோ ரூட் கூறுகையில் "நான் பாகிஸ்தான் செல்ல விரும்புகிறேன். அங்கு சென்று விளையாடுவது சிறந்த வாய்ப்பாகும். இது என்னுடைய தனிப்பட்ட கருத்து. துரதிஷ்டவசமாக என்னால் முடிவு எடுக்க முடியாது. கிரிக்கெட் விளையாடுவதற்கும், அங்கு செல்வதற்கும் சிறந்த நாடு பாகிஸ்தான்" என்றார். (ரி2)



# இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது பி.எஸ்.ஜி

லிஸ்பன், ஒக.20

பி.எஸ்.ஜி. அணி 3:0 என்ற கணக்கில் வெற்றி பெற்று சம்பியன்ஸ் லீக் கால்பந்தில் முதல்முறையாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்து வரலாறு படைத்துள்ளது.

கழக அணிகளுக்கான ஐரோப்பிய சாம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டி போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் இரவு நடந்த அரை இறுதி ஆட்டத்தில் பி.எஸ்.ஜி. எனப்படும் பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் (பிரான்ஸ்) அணியும், ஆர்.பி.லெப்ஜிக் (ஜெர்மனி) அணியும் மோதின. பந்தை கட்டுப்பாட்டில் (58 சதவீதம்) வைத்திருப்பதிலும், பந்தை கடத்திச் சென்று கோல் நோக்கி துல்லியமாக அடிப்பதிலும் பி.எஸ்.ஜி. அணி விரைவாக ஆதிக்கம் செலுத்தியது.

6 ஆவது நிமிடத்தில் பி.எஸ்.ஜி. வீரர் நெய்மார் நெருக்கமாக வந்து அடித்த பந்து கம்பத்தில் பட்டு மயிரிழையில் நழுவியது. அதைத் தொடர்ந்து 13 ஆவது நிமிடத்தில் கிடைத்த பிரிகிக் வாய்ப்பில் உதைக்கப்பட்ட பந்தை பி.எஸ்.ஜி. வீரர் மார்கியூனோஸ் தலையால் முட்டி வலைக்குள் தள்ளினார். தொடர்ந்து பி.எஸ்.ஜி. வீரர்கள் ஏஞ்சல் டி மரியா (42 ஆவது நிமிடம்), ஜுவான் பெர்னட் வெலஸ்கோ (56 ஆவது நிமிடம்) ஆகியோரும் கோல் போட்டு அசத்தினர். லெப்ஜிக் அணியால் கடைசி வரை ஒரு கோல் கூட திருப்ப முடியவில்லை. இறுதியில் பி.எஸ்.ஜி. அணி 3:0 என்ற கணக்கில் வெற்றி பெற்று சம்பியன்ஸ் லீக்கில் முதல்முறையாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்து வரலாறு படைத்துள்ளது. பி.எஸ்.ஜி. அணி எதிர்வரும் 23 ஆம் திகதி நடக்கும் இறுதி ஆட்டத்தில் பேயர்ன் முனிச் அல்லது லயன் ஆகிய அணிகளில் ஒன்றை சந்திக்கும்.(ரி2)

# விளையாட்டு விழா 28இல் ஆரம்பம்

சாவகச்சேரி, ஒக.20

தென்மராட்சிப் பிரதேசத்தின் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான இவ்வருட விளையாட்டு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. கொவிட்19 ஐ கருத்தில் கொண்டு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வுகளும், பரிசில்கள் வழங்கலும் இடம்பெறும் என பிரதேச செயலர் உ.சுபலிங்கம் அறிவித்துள்ளார். இவ் வருடம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான குழுநிலைப் போட்டிகள் கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்று இறுதிப் போட்டிகளும் பரிசில்கள் வழங்கலுக்குமான ஏற்பாடுகள் கடந்த மார்ச் மாதம் நடத்த ஏற்பாடுகள் மேற்கொண்ட வேளையில் கொவிட்19 காரணமாக நிகழ்வு பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ரி2-9)

# குழுநிலை போட்டிகள் ஆரம்பம்

சாவகச்சேரி, ஒக.20

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தென்மராட்சி பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான இவ் வருட விளையாட்டுப் போட்டிகளின் குழு நிலைப் போட்டிகள் நாளைமறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இந்தப் போட்டிகள் மீசாலை சீமா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. கரப்பந்து மற்றும் கயிறு இழுத்தல் போட்டிகளே இங்கு இடம்பெறவுள்ளன. எதிர்வரும் 23 ஆம் திகதி கைதடி சரஸ்வதி விளையாட்டு மைதானத்தில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டம், ஆண்,பெண் பிரிவினருக்கான எல்லே மற்றும் பெண்களுக்கான கிரிக்கெட் போட்டிகளும் நடைபெறவுள்ளன. (ரி2-9)

# தென்மராட்சி பிரீமியர் லீக்கின் இறுதிச் சுற்றும் பரிசில் வழங்கலும்

சாவகச்சேரி, ஒக.20

தென்மராட்சி பிரீமியர் லீக்கினால் தென்மராட்சி பிரதேச கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டுக்கான கிரிக்கெட் போட்டியின் இறுதிச் சுற்றும் பரிசில்கள் வழங்கலும் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வானது லீக்கின் இவ் வருட நிர்வாகத் தலைவர் க.அன்ரன் தேவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கடற்றொழில் அமைச்சரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2-9)

# ஸ்ரோபரி ஆடை

இந்தப் பெருந்தொற்று காலத்தில், பல புதுமையான போக்குகளை எதிர்கொண்டுவருகிறோம். உலகம் ஊரடங்குக்குள் சென்றுவிட்ட காலத்தில், சமூக ஊடகங்கள் மட்டுமே பலருக்கும் வடிகாலாக அமைந்திருக்கின்றன. இப்போது கொஞ்சம் கொஞ்சமாக, உலகம் ஊரடங்கிலிருந்து மீண்டுவரும் நிலையில், பலரும் தங்களைப் புதுப்பித்துக்கொள்வதற்கான முயற்சிகளை எடுத்துவருகிறார்கள். அப்படியொரு முயற்சிதான் 'ஸ்ரோபரி' ஆடை.

இந்த 'ஸ்ரோபரி' ஆடை சமூக ஊடகங்களில் அண்மைக் காலமாக வைரலாகி வருகிறது. பெண்கள் பலரும் இந்த ஆடையை வாங்கி, அணிந்துகொண்டு தங்கள் ஒளிப்படங்களை சமூக ஊடகங்களில் பகிர்ந்துவருகிறார்கள். இதுவரை பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் #strawberrydress என்ற ஹாஷ்டாக்குடன் தங்கள் ஒளிப்படங்களைப் பகிர்ந்துள்ளார்கள். நியூயோர்க்கைச் சேர்ந்த ஆடை வடிவமைப்பாளர் லிரிக்கா மத்தோஷி, இந்த 'ஸ்ட்ராபெர்ரி மிடி டிரஸ்'ஸை வடிவமைத்திருக்கிறார். இதன் மதிப்பு 500 டாலர் (இந்திய மதிப்பில் ரூ. 37,000).

கடந்த பெப்ரவரி மாதம் இந்த ஆடையை வாங்கிய அமண்டா என்ற ஃப்ளோரிடாவைச் சேர்ந்த பெண், தன் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் இந்த ஆடையை அணிந்து தன் ஒளிப்படத்தைப் பகிர்ந்தார். அந்தப் பதிவில் வடிவமைப்பாளர் லிரிக்கா மத்தோஷியையும் இணைத்திருந்தார். அதன்பிறகு, அவர் அந்தப் பதிவையே மறந்துவிட்டார். ஆனால், திடீரென்று சில வாரங்களுக்குமுன், அவரது 'ஸ்ரோபரி' ஆடை ஒளிப்படத்துக்கு லைக்குகள் அதிகரிக்கத் தொடங்கி இருக்கின்றன.

கடந்த இரு வாரங்களில் பல பெண்கள் இந்த ஆடையை வாங்கியிருக்கிறார்கள். குவாரன்டைன் காலத்தில் வீட்டில் 'கேஷுவல் ஆடை'களை அணிந்து பல பெண்கள் சலிப்படைந்ததுதான் அதற்குக் காரணம். தேவதைக் கதை கதாபாத்திரத்தின் தோற்றத்தை அளிக்கும் விதத்தில், இந்த ஆடை இருப்பதால்தான், தற்போது அது பிரபலமடைந்துள்ளதாகச் சொல்கிறார்கள் வடிவமைப்பாளர்கள்.



இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 20.08.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.